**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-050420213867

Volume: 5

Issue: 4

Month: April

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.01.2021

Accepted: 08.02.2021

Published: 01.04.2021

Citation:
Shobana, H., and P. Maheshwari. "Biblical Virtues in Thearo Short Stories." *Shanlax International Journal of Tamil Research*, vol. 5, no. 4, 2021, pp. 26–31.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i4.3867

*Corresponding Author:
shobana.gac@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Biblical Virtues in Thearo Short Stories

**H. Shobana**
*Assistant Professor, Tamil Department, Government Arts College, Ooty*
*Nilgiris District, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0002-8985-1615

**P. Maheshwari**
*Research Scholar, Tamil Department, Government Arts College, Ooty*
*Nilgiris District, Tamil Nadu, India.*

**Abstract** - Religion is the symbol of the human way of life. Religion can be considered as a morality that takes one to the heights of human life. Religion is a way to make life happier, more fulfilling, and more refined. Throughout human history, religions have emerged and flourished in various parts of the world in an attempt to refine man's depravity. They have established their movement in various media as arts, literature and philosophy that have taught the sweet meanings of life. Religion teaches man the superiority of human values. That is, it teaches many more classic qualities, such as love, kindness, compassion, empathy, and honesty.

**Key Words:** Thiaroo, The Bible, the values, the religion, the way of life, the values of life

**References**

1. Thiyaru. *Thiyaru Sirukathaikal*, Chennai, New Century Book House Pvt. Ltd.
2. *Parisutha Vethakamam*, 206 Magathma Gandhi Road, Bangalore, India Vethakama Sangam.
3. Asirvatham, RS. *Parisutha Vethakama Othavakkiya Vizhakkavurai*. Chennai, Suvisesha Uzhila Noolnilayam.

# தியாரூ சிறுகதைகளில் விவிலிய அறமதிப்புகள்

***முனைவர் எச். ஷோபனா***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி
உதகமண்டலம்

***ப. மகேஸ்வரி***
முனைவர் பட்ட ஆய்வாளர்,தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி
உதகமண்டலம்

***முன்னுரை***

*சமயம் என்பது மனித வாழ்க்கை நெறியின் அடையாளமாக உள்ளது. மனித வாழ்தலின் உன்னதங்களை நோக்கி ஒருவரை அழைத்துச் செல்லும் அறவாற்றலாகச் சமயத்தைக் கருதலாம். வாழ்தலை மகிழ்ச்சியாகவும், நிறைவாகவும், செம்மையாகவும் அமைத்துக்கொள்வதற்கான ஒருவழியாகச் சமயம் அமைந்துள்ளது. மனித வரலாற்றில் காலந்தோறும் அந்தந்தப் பகுதிகளில் அச்சமூக மனநிலைகளுக்கு ஏற்பச் சமயங்கள் தோன்றி செழித்துள்ளன் மனிதரின் இழிகுணத்தை, பாழ்மன அசைவுகளைச் செம்மைப்படுத்த முயன்றுள்ளன வாழ்தலுக்கான இனிமையான அர்த்தங்களைக் கற்பித்துள்ளன கலைகளாக, இலக்கியமாக, தத்துவமாகப் பல்வேறு ஊடகங்களில் இவை தம் இயக்கத்தை நிறுவியுள்ளன. சமயம் என்பது மானுட மேன்மையை, வாழ்வியல் விழுமியங்களை மனிதனுக்குக் கற்றுக்கொடுக்கிறது. அதாவது அன்பு, இரக்கம், ஈகை, கூட்டுணர்வு, நேர்மை போன்ற செவ்வியல் பண்புகளைக் கற்பிக்கின்றது.*

***முக்கியச்சொற்கள்:*** *தியாரூ, விவிலியம், அறமதிப்புகள், சமயம், வாழ்க்கை நெறி, வாழ்வியல் விழுமியம்*

தமிழ் இலக்கிய வரலாற்றில் சமயங்களின் பங்கு மகத்தானது. படைப்புத்திறன்மிளிரும் இலக்கிய வடிவங்களால் மட்டுமல்ல, விழுமிய வளம் செழிக்கும் கருத்தியல் கூறுகளாலும் சமயங்கள் தமிழை மேம்படுத்தியுள்ளன. தமிழகத்தில் வேறூன்றிச் செழித்துள்ள கிறித்துவ சமயம் தமிழ்ச்சமூகக் கருத்தியலில் இலக்கியக் கட்டமைப்பியலில் செழுமைத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மனிதன் வாழ்க்கையை நல்லமுறையில் வாழ அறக்கருத்துகள் மிகமிகத் தேவை. அறக்கருத்துக்கள் வயல் வரப்புபோல தீங்கிலிருந்து தடுத்து வாழ்க்கையை வளமாக்க முக்கியப் பங்கு வகிக்கின்றன. அறக்கருத்துக்கள் மனிதனின் வாழ்வைச் செப்பனிடும் கருவியாக விளங்குகின்றன. ஒரு சமூகம் செம்மையானதாக விளங்க அறக்கருத்துகள் உள்ளும், புறமும் நின்று சீராக்கிச் சமூகத்தைச் சிறக்கச் செய்கின்றன. "செத்த எலி எறப்பிலே இருந்தாலும், கீழே இடுக்கிலே இருந்தாலும் வீடே நாறும்". இது போல ஒழுக்கம் கெட்டவர்கள் உயர்மட்டத்தில் இருந்தாலும், அடிமட்டத்தில் இருந்தாலும் சமுதாயத்திற்குரிய மரியாதை கிடைக்காது. தமக்குத்தாமே ஏற்படுத்திக் கொண்ட ஒழுக்கக் கட்டுப்பாடுடன் வாழாத மனித சமுதாயம் என்றும் உயர்வு பெறாது. மனிதவாழ்க்கை சிறக்க அறக்கருத்துகள் தேவை.

வாழ்வியல் விழுமியங்களைச் சிந்திப்பதும் அறக்கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ளுதலும்

அதன்மூலம் மனிதன் தன் வாழ்வையும் சமூக வாழ்வியலையும் மேம்படுத்திக் கொள்வதும் இன்றையக் காலச் சூழலில் தேவையானவை. அந்தவகையில் நோக்கும்போது, தியாரூ சிறுகதைகளில் விவிலிய அறச்சிந்தனைகள் ஆங்காங்கே எவ்வாறு பரவிக்கிடக்கின்றன என்பதைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தியாரூ சிறுகதைகளில் இடம்பெறும் விவிலிய அறமதிப்புகள் பின்வருமாறு:**

1. அன்பு
2. ஈகை
3. பெண் கணவனுக்கு உறுதுணையாய் இருத்தல்
4. உயிர்கள் மீது அன்பு கூறுதல்

**1 . அன்பு**

அன்பு என்னும் பண்பியலை, வாழ்நெறிப்பாங்கை நிராகரிக்கிற எந்த நிறுவனமும் இல்லை. இருக்கவும் முடியாது. மனிதப் பேருணர்வுகளில் தலையாய பேருணர்வு அன்பு தான். தன் மனிதனை மேம்படுத்துவதும் அதுதான். சமூக அமைப்பை ஒருங்கிணைப்பதும் அதுதான். “அன்பின் வழியது உயிர்நிலை” என்றும் “அன்புடையார் என்றும் உரியர் பிறர்க்கு” என்றும் வள்ளுவர் கூறுவார். மனிதனின் செம்மையைச் செயற்படுத்து வதில் அடிப்படை உயிர்ப்பாக இருப்பது அன்புதான். இந்த அன்புதான் பரந்து, விரிந்து கருணையாகிறது.

தியாரூவின் “வலை” என்னும் சிறுகதையில் வரும் திலகன் குடும்பத்தினர் வெளியூரில் வசித்து வருகின்றனர். திலகன் மனைவி தீபிகா தன்னுடைய இரண்டு குழந்தைகளான நிசா, சோனாவுடன் தன் அப்பாவைப் பார்க்க சொந்த ஊருக்குப் புறப்பட்டான். கடந்த வருடம் தன் தாய்தந்தை, அக்கா உமாகுடும்பம், தங்கை கௌரிகுடும்பம், தம்பி சிவபிரகாஷ் குடும்பத்தினருடன் தீபாவளிப் பண்டிகையை நன்றாக கொண்டாடினர். இந்த வருடம் அம்மா இறந்துவிட்டதால், இந்த வருடம் அப்பா மட்டும் தன்மையில் இருப்பார். அவருக்கு ஆறுதல் சொல்லிவிட்டு, மற்றவர்களையும் பார்க்கும் ஆர்வத்துடன் வருகிறார்கள் திலகன் குடும்பம்.

வீட்டுவாசல் முன்பு யாரும் இல்லை. மாமா, மாமா என்று அழைத்தப்படியே உள்ளே சென்றாள் தீபிகா. இருட்டு அறையில் சாய்வு நாற்காலியில் அமர்ந்தபடியே உறங்கிக் கொண்டிருந்தார் மாமனார்.

திலகன் அப்பா என்று குரல் கொடுத்ததும் அடுத்த வினாடியே எழுந்து நின்றார். இருவரும் கட்டித்தழுவி அம்மாவை நினைத்துக் கதறி அழுதனர். பேரப்பிள்ளைகளைக் கட்டித்தழுவி முத்தமிட்டார். அக்கா குடும்பம், தங்கை, தம்பி என யாரும் அப்பாவைப் பார்க்க வரவில்லை. அம்மா இருக்கும் வரை இருந்த அன்பு பாசம் எல்லாம் அம்மா இறந்தபிறகு மற்ற பிள்ளைகளுக்கு இல்லாமல் போனது. திலகன் தாயின் வருட திதியைச் செலுத்திவிட்டு தன் அப்பாவுக்கு வேண்டிய எல்லா வேலைகளையும் செய்து கொடுத்தான். திலகன் அப்பாவை எப்போதும் தன்னுடனே இருக்கும்படி அழைத்தான். ஆனால் அப்பா “குடும்பங்கிற வலை கிழியாம பாதுகாக்க வேண்டிய கடமை எனக்கிருக்குதுடா. என் உயிர் இருக்கும் மட்டும் அதைக் கிழிய விடமாட்டேன். அன்பு வலை ஒருபோதும் கிழியாதுடா” என்று கூறினார். (தி.சி.ப.48)

அந்த வரிகள் அப்பாவின் உண்மையான அன்பை வெளிப்படுத்துகின்றன. அப்பாவின் தியாக அன்பு விவிலிய அறமதிப்பைப் பிரதிபலிப்பனவாய் அமைந்துள்ளன.

1. “நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள், நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்” (யோவான் 13:34., ப.148)

2. “உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள்” (ரோமர் 12:9., ப.221)
3. “அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது” (ரோமர் 13:10.,ப.222)
4. “நீ அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு” (II தீமோத்தேயு - 2:22., ப.292)
5. “ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது” (யோவான் 3:23., ப.328)

என்னும் விவிலிய வார்த்தைகள் தந்தையின் உண்மையான அன்பை வாழ்க்கையில் பிரதிபலிப்பதை அறிய முடிகிறது.

### 2. ஈகை

சந்தனக் கட்டையானது தேய்க்கத்தேய்க்க, நறுமணத்தை இழப்பதில்லை. அதுபோல நல்லபண்புடையார் ஆளும்நிலையிலிருந்து வீழும்நிலையை எய்திய போதிலும் அவர் தன் தாராள மனம் சிறியது ஆவதில்லை. தியாரூவின் “மூன்று நல்வாக்குகள்” என்னும் சிறுகதையில் வரும் மதிவாணன் வேலை பார்த்த நிறுவனத்தில் முக்கியப்பொறுப்பில் இருந்தான். வேலையை படுவேகமாக செய்துமுடிக்கும் திறமைசாலி. இவனது திறமையின்மீது பொறாமை கொண்டான் கிங்சிலி என்பவன். அதனால் மேலிடத்தில் மதிவாணனைப் பற்றித் தவறாகப் பல அவதூறுகளைச் சொல்லிவிடுகிறான். எனவே மனமுடைந்த மதிவாணன் வேலையை விட்டுவிட்டுச் சென்றுவிடுகிறான். நல்ல நிலையில் வேலைபார்த்து வந்த மதிவாணன் இப்பொழுது வேலையற்ற நிலையில் வருத்தமுறுகிறான். அந்த நிலையிலும் ஒரு ஏழைக் கிளவிக்கு தன்னால் முடிந்த பண உதவியைச் செய்கிறான். காலப்போக்கில் மதிவாணனுக்கு நல்லவேலை கிடைத்தது; படிப்படியாக வாழ்க்கையில் முன்னேறினான்.

**இக்கதையில் வரும் சம்பவங்கள் விவிலியத்தில் இடம்பெற்றுள்ள,**

1. “நேர்மையையும் இரக்கத்தையும் கடைப்பிடித்து நடப்பவன் நீடித்து வாழ்வான், மேன்மையும் அடைவான்” (நீதி மொழிகள் 21:9., ப.87) என்னும் கருத்தை விளக்குவதாய் உள்ளது. மேலும்,
2. “நீங்கள் உருக்கமான இரக்கத்தைத் தரித்துக் கொள்ளுங்கள்” (கொலோசெயர் 3:12., ப.277)
3. “இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்” (யாக்கோபு 2:13., ப.313)
4. “உங்களுக்கு இரக்கமும் சமாதானமும் அன்பும் பெருகக்கடவது” (யுதா1:2., ப.332)
5. “இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்” (ரோமர் 12:8.,ப.221)
6. “பிறனை அவமதிக்கிறவன் பாவஞ்செய்கிறான், தரித்திரனுக்கு இரங்குகிறவனோ பாக்கியமடைவான்” (நீதிமொழிகள் 14:21., ப.775)

என்னும் விவிலிய வார்த்தைகள் மதிவாணன் வாழ்க்கையில் பிரதிபலிப்பதை உணரமுடிகிறது.

### 3 . கணவனுக்கு உறுதுணையாய் இருத்தல்

இல்லறக் கடமைகளை நேர்த்தியாக நிறைவேற்றத் தலைவனுக்குத் துணையாக இருப்பவள் மனைவி. எனவேதான் வள்ளுவர், இல்வாழ்க்கை அதிகாரத்திற்கு அடுத்ததாக “வாழ்க்கைத் துணைநலம்” எனும் அதிகாரத்தில் நல்மனைவிக்கு இருக்க வேண்டிய பண்புகளைக் குறிப்பிடுகின்றார். கணவனின் வருவாய்க்கேற்றப் படி செலவு செய்கிற மனைவியே பண்புள்ள வாழ்க்கைத் துணையாவாள். மனைவியானவள் நற்பண்புகள் இல்லாமல் மற்ற சிறப்புகள் எத்தனை இருந்தாலும் பயனற்றவளாகவே கருதப்படுவாள். மனைவிக்கு கற்புநெறி மிகவும் முக்கியமானது.

'எந்தவொரு ஆடவனின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள்' என்ற கூற்றும் குறிப்பிடத்தக்கது.

தியாரூவின் 'மூன்று நல்வாக்குகள்' என்னும் சிறுகதையில் வரும் கதைத்தலைவி காஞ்சனாவை கணவனுக்கு உறுதுணையாய் இருக்கும் பாத்திரமாகப் படைத்துள்ளார். தியாரூ. காஞ்சனாவின் கணவன் மதிவாணன் வேலையில்லாமல் கலங்கிக் கொண்டிருந்த நாட்களில் அவனுக்குப் பக்கபலமாக இருந்தாள் காஞ்சனா.

1. "காஞ்சனா ரொம்ப நல்லவள், பொறுமைசாலி" (தியாரூ சிறுகதைகள் ய.சி. ப.325)
2. "மதிவாணன் சிறிதும் சோர்ந்துவிடாதபடி, அவனை தைரியப்படுத்துவதையே அப்போதைய தனது முக்கிய கடமையாக அவள் கருதினாள்" (மேலது.,ப.326)
3. "இருக்கிற பணம் ஒரு மாசத்துக்குப் போதும். மேற்கொண்டுயார்கிட்டேயும் கேட்க வேண்டிய அவசியம் வராது. உங்களுக்கு வேலை கிடைச்சிடும்" (மேலது.,.ப.327)
4. "காஞ்சனாவின் ஒவ்வொரு வார்த்தையும் அவனுக்குள் உறமேற்றியது" (மேலது., ப. 327)
5. "ஏறத்தாழ ஏழுமாத காலம் போராட்டம் தான். ஆனால் எந்த நெருக்கடிகளிலும் அய்யோகுய்யோ என்று காஞ்சனா அலறவில்லை" (மேலது., ப.327)
6. "மதிவாணன் சோர்ந்து விழும்போதெல்லாம் காஞ்சனா கரம்கொடுத்து தாங்கினாள்" (மேலது., ப.327)

என்னும் வரிகள் காஞ்சனா கணவனுக்கு உறுதுணையாய் இருந்து குடும்பம் நடத்துவதை தெள்வுப்படுத்துகின்றன. காஞ்சனாவின் இக்குணநலன்கள் விவிலிய அறமதிப்பைப் பிரதிபலிப்பவனாய் அமைந்துள்ளன.

7. "புத்தியுள்ள ஸ்திரீ தன்வீட்டைக் கட்டுகிறாள். புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்" (சங்கீதம் 14:1., ப.774)
8. "குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது"(நீதிமொழிகள் 31:10., ப.790)
9. "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்படிக்கிறது போல, உங்கள் சொந்தப்புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்" (எபேசியர் 5:22., ப.268)
10. "இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன்தாயையும் விட்டுதன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். (மேலது., 5:31., ப.268)
11. "எப்படியும், உங்களில் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவது போல, தன் மனைவியிடத்திலும் அன்புகூரக்கடவன். மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்" (மேலது., 5:33., ப.268)

என்னும் விவிலிய வார்த்தைகள் காஞ்சனாவின் வாழ்க்கையில் பிரதிபலிக்கின்றன.

## 4 . உயிர்கள் மீது அன்புகூருதல்

எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணும் மனநிலை மாந்தருக்கு வரவேண்டும். பிற உயிர்களை வாட்டிவதைப்பது வருந்தத்தக்க செயலாகும். மனிதர்கள் உயிர்கள் மீது அன்புகொண்டு அதனைத் துன்புறுத்தாதிருக்க வேண்டும்.

தியாரூவின் "வள்ளலார் பேசுகிறார்" என்னும் சிறுகதையில் வரும் நிரஞ்சனின் வீட்டில் பூனைக்குட்டிகள் வந்து குட்டிப்போட்டு கத்துகிறதும், நெளிகிறதும் அவனுக்குக் கோபத்தை வரவழைத்தது. மனைவி ஜெனிலியாவைப் பார்த்து நான் வேலைக்குப் போய்விட்டு வரும்போது இந்தப் பூனைக்குட்டிகள் இங்கு இருக்கக்கூடாது என்று கூறிவிட்டு வேலைக்குச் சென்றுவிடுகிறான். தாய் ஜெனிலாவும், மகள் சுஜிலாவும் அந்த

பூனைக்குட்டிகளை எடுத்து துணியில் படுக்கவைக்கின்றனர். கத்துவதற்கு பெலன் இல்லாததைஅறிந்த ஜெனிலாமைஉறிஞ்சும் குழல்மூலம் பால் எடுத்துக் குட்டிகளுக்கு ஊட்டுகிறாள். இரவில் நிரஞ்சன் வீட்டிற்கு வந்தபோது ஒரு புத்தகத்தை எடுத்து வாசிக்கிறான். அதில் உள்ள வைர வரிகள்,

> **“அப்ப நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிய வேண்டும்.**
> **ஆருயிர்க்கெல்லாம் நான் அன்பு செய்ய வேண்டும்”**
>
> ***(தி.சி.ப.86)***

வாசித்ததில் உள்ளம் மாறினான். மறுநாள் பூனைக்குட்டிகள் மீது அன்பு உண்டானது.

1. “உன்னில் அன்பு கூருவது போல் பிறனிலும் அன்பு கூருவாயாக” (லேவியராகமம், 19:18., ப.151)
2. “உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல, பிறனிடத்திலும் அன்பகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப் பிரமாணம் முழுவதும் நிறைவேறும்” (கலாத்தியர், 5:15.,ப.262)
3. “உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரீக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள்” (யாக்கோபு,2:8.,ப.313)
4. “அப்பொழுது அம்மாளே, நாம் ஒருவரிலொருவர் அன்புகூற வேண்டும்” (II யோவான, 5., ப.330)

பிற உயிர்களிடத்தில் அன்பு கூருவது சுஜிலா, ஜெனிலா வாழ்க்கையிலும் மட்டுமல்ல, நிரஞ்சனின் மனதை மாற்றியதையும் உணரமுடிகிறது. பிறரிடத்தில் அன்பு கூற வேண்டும் என்னும் விவிலியவார்த்தைகள் நிரஞ்சனின் குடும்பத்தினரிடையே பிரதிபலிக்கின்றன.

## முடிவுரை

அழிவை நோக்கிப் பயணிக்கும் அல்லது தனிமனித மற்றும் சமூகச் சீர்க்கேட்டினால் அழிந்துகொண்டிருக்கும் மானுடத்தைச் சீர்ப்படுத்தும் நோக்கில் அறச்சிந்தனைகள் கவிஞரால் இலைமறைகாய் போல் ஆங்காங்கே கதைகளில் கையாளப்பட்டுள்ளன. இச்சிறுகதைகளின் மூலம் சொல்லப்படுகின்ற கருத்துகள் உலகம் முழுமையும் வாழ்கின்ற மக்களுக்கு உரியனவாக இருப்பதால் விவிலிய மதிப்புகள் என்பது அடையாளப் பெயரேதவிர சமயத்தின் அடிப்படையில் இலக்கியத்தைப் பிரித்துப் பார்ப்பது நோக்கமன்று. தியாரூவின் சிறுகதைகளில் இடம்பெறும் பாத்திரங்களின் செயல்பாடுகளினூடே விவிலிய அறமதிப்புகள் வெளிப்பட்டு நிற்பதை அறியமுடிகிறது.

## துணைநின்ற நூல்கள்


1. தியாரூ. *தியாரூ சிறுகதைகள்.* அம்பத்தூர், சென்னை, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்(பி) லிட்,
2. *பரிசுத்த வேதாகமம்.* 206 மகாத்மா காந்திசாலை, பெங்களூர், இந்திய வேதாகமச் சங்கம்,
3. ஆசிர்வாதம், ஆர்.எஸ். *பரிசுத்த வேதாகம ஒத்தவாக்கிய விளக்கவுரை,* சென்னை, சுவிஷேய ஊழிய நூல்நிலையம்.